உ
சிவ சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் பிரபந்தங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 OCT 1959
MADRAS

விகாரி ஆவணி மூலம்

11—9—1959

★

...க் கல்லூரி, திருப்பனந்தாள்

O-,11MAT,A
V02402

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள்

உ

சிவ. சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் நவமணிமாலை

1. திருமகள் கேள்வனும் நாமகள் கேள்வனும்
தேடிக்காணு
துருவளர் கீற்றுப் பிறையணி செஞ்சடை
யுத்தமனல்
மருவிலா நந்திக் குபதேசஞ் செய்ந்நன்
மரபதுதான்
திருக்கயி லாய பரம்பரை யாய
திருமரபே.

2. மரபதில் வந்த தருமையா தீன
பரம்பரையில்
குரவராம் ஞானச் சுடர்மாசி லாமணித்
தேசிகர்பால்
அருள்பெறு தெய்வக் குமர குருபர
மாமுனிவர்
வரமிகு காசியில் கண்டனர் காசி
மடமதுவே.

3. காசி மடத்திற் குருபர ரின்வழி
வந்தவருள்
பேசும் புகழ்த்தில்லை நாயகத் தம்பிரான்
பேரருளால்
மாசில் புனல்மண்ணி மல்கும் பனசையாம்
மாநகரில்
தேசுயர் மாமடம் செய்தனர் சைவஞ்
செழித்திடவே.

4. சைவஞ் செழித்திடத் தாரணி யெங்குந்
தருமமிகத்
தெய்வப் பசுந்தமிழ் நூல்கள் வெளிவரத்
தேசமுற்றும்
உய்வருள் காசி மடத்தி லிருபதா
மாட்சிவழி
மெய்வந் ததிபராய் மேவினர் அண்ணல்
அருள்நந்தியே.

5. அருள்நந்தி செம்மல்பே ரன்பி னுறைவிட
மாக்கமிகப்
பொருள்தரு கற்பகம் புண்ணியக் கொள்கலம்
பூதலத்தில்
அருள்நிறை மாகட லாங்கில மிந்தி
யருந்தமிழை
மருள்கெடக் கற்றுத் தெருள்பெற நின்றவோர்
மாமணியே.

6. மாமணி கண்டன் மகிழும் தலங்களில்
மாணொளிசேர்
நாமஞ் சிவசிவ என்னும் விளக்கும்
புனற்பந்தரும்
சேம வயித்தியம் அன்னதா னம்முதற்
பற்பலவும்
நேமமாய்ச் செய்ய நிதியளித் தாரருள்
நந்திதாமே.

7. மேன்மைசெய் கல்வி வளர்ச்சியை எண்ணி
மிகுபொருளால்
தேன்தமிழ்க் கல்லூரி யொன்றும் நடுத்தரப்
பள்ளியொன்றும்
பான்மதிச் சோலைப் பனசையில் வைத்தனர்
பன்னகருள்
வான்புகழ்க் கல்வி வளர்க்கும் அருள்நந்தி
யாம்வள்ளலே.

8. வள்ளல் அருள்நந்தி தாம்செய் யறங்களின்
வான்பயனைக்
கொள்ளவும் அவ்வறத் தின்வழிச் சென்றே
குலவிடவும்
மெள்ளவென் உள்ளத்தைக் கொள்ளைகொண்
டேபின்னர் மேதினியில்
கொள்ளச்செய் திட்டவிந் நன்றியை யென்றுங்
குறிக்கொள்வனே.

9. கொள்ளக்கொள் ளக்கொடுக் கின்ற அருள்நந்திக்
கோமகனும்
வள்ளலுக் கையா றிரட்டித்த ஆண்டு
நிறைவுகண்டே
உள்ளம் மகிழ்ந்தன னூழிபல் லாண்டவர்
வாழியவே
அள்ளல் வயற்செந்தி லாண்டவன் செய்க
அருட்டிருவே.

இங்ஙனம்

திருப்பனந்தாள்
11-9-1959

ஸ்ரீ காசிமடம் இளவரசு
வித்துவான் மகாலிங்கத் தம்பிரான்

—

உ
சிவ சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் திருத்தசாங்கம்

சீராரும் செஞ்சொல்லைச் செப்பும் சிறுகிளியே!
பாராரும் நற்புகழ்சேர் பண்பாளன்—தாராளன்
ஆதாரன் அண்ணல் அருள்நந்தி தன்மலையைக்
கேதாரம் என்றே கிளத்து. (1)

மங்கை உமையின் மரகதமா மேனியைப்போல்
அங்கம் படைத்த அருங்கிளியே!—செங்கனகம்
அங்கை அருளும் அருள்நந்தி தன்நதியைக்
கங்கைபொன்னி என்றே கழறு. (2)

நன்னார் மொழிக்கிளியே! நல்ல நிதிவைத்துக்
கன்னிமுதற் கேதாரம் ஈருக—அன்னத்தை
ஆர அளிக்கும் அருள்நந்தி தன்நாட்டைப்
பாரதநா டென்றே பகர். (3)

மாசில் மொழிக்கிளியே! மாண்பாகப் பூதலத்தில்
ஆசில் திருமுறைகள் அச்சிட்டு—நேசமுடன்
ஆசி அளிக்கும் அருள்நந்தி தன்நகரைக்
காசிபனந் தாளெனவே பேசு (4)

இன்பான் மொழிக்கிளியே! இன்னிசையோ டெல்லோரும்
கன்னற் றமிழ்மொழியைக் கற்பதற்கு—நன்னிதியம்
அன்பாக வைத்த அருள்நந்தி மேவுந்தார்
கொன்றைத்தார் என்றேநீ கூறு. (5)

பற்றையினைப் போலலகு பாரித்த பைங்கிளியே!
கற்றைச் சடையோன்றன் கட்டுரைத்த—நற்சைவ
ஆகமத்தைப் போற்றும் அருள்நந்தி வாசியினை
யோகமார் வாசியென ஓது. (6)

தேனன்ன சொற்கிளியே! தேவாரக் கல்லெழுத்தைக்
கூனற் பிறையாளன் கோவிலினில்—தானம்செய்
ஆனந்த வாரி அருள்நந்தி தன்களிற்றை
ஞானவும்பல் என்றே நவில். (7)

பொற்பார் பசுங்கிளியே! நற்சைவ சித்தாந்தம்
பற்பல் கலைக்கழகத் தும்பரவச்—சொற்பொழிவை
ஆற்றநிதி வைத்த அருள்நந்தி தன்கொடியை
ஏற்றுக் கொடியென் றியம்பு. (8)

கொவ்வைக் கனிவேட்கும் கூரலகுப் பைங்கிளியே!
செவ்வைச் சிவசிவஎன் னும்மொழியால்—இவ்வுலகில்
ஆராரும் போற்றும் அருள்நந்தி தன்முரசைச்
சீரார் சிவமுரசாய்ச் செப்பு. (9)

பால்கூட்டிப் பேசும் பசுங்கிளியே! சைவஞ்செங்
கோல்காட்டி ஆள்கின்ற கோகனதக்—கால்காட்டி
ஆட்கொண் டருளும் அருள்நந்தி ஆணைதனை
வேட்கும் அருளாய் விளம்பு. (10)

இங்ஙனம்

திருப்பனந்தாள்
11—9—1959

ஸ்ரீ காசிமடம் இளவரசு
வித்துவான் மகாலிங்கத் தம்பிரான்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ காசியினின்று திருப்பனந்தாளுக்கு எழுந்தருளியஞான்று சமர்ப்பித்தது.

உ
சிவ.சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் அலங்கார பஞ்சகம்

திங்கள் அமுதமெனத் தேவார இன்னிசையைக்
கங்கை நதிபாயும் காசிதனில்— துங்கமுடன்
ஓதுவார் ஓதநிதி வைத்த அருள் நந்தி
பாதமலர் யாம்கொள்ளும் பற்று. (1)

பற்ருகச் சைவர்கள் பாடும் திருமுறை பன்னிரண்டும்
கற்ருர் மிகவுறை அண்ணு மலையிலும் காஞ்சியிலும்
ஒற்றிய தாளத்துத் தேவாரம் ஓத உயர்நிதியம்
அற்புடன் வைத்தார் அருள் நந்தி யாய அருந்தவரே. (2)

அருந்தவ முனுற்றுறு மந்தணர் போல
ஒருகால் மடக்கி மறுகா லூன்றியுஞ்
சிறியவை விடுத்துப் பெரியவை பேணியும்
அறிதுயிற் கொண்டு மண்டங் காத்தும்
நரிடை நின்றும் நிலத்திடை யுற்றும்
தோலுடை யன்றிப் பிறிதுடை யின்றியும்
நாரைகள் நோற்கும் நாரையூர் தனிலும்
இருபிறப் பியைந்த ஒருபிறப் பெய்தும்
நான்மறை முனிவர் மூவா யிரவரும்
ஆகுதி வழங்கும் யாக சாலையிற்
றூஉ நறும்புகை வானுற எழூஉம்
வலனுயர் சிறப்பிற் றில்லை தன்னிலும்
விண்டலர் மணக்கும் தண்டலை தோறும்
கொண்டல் தவழும் கொட்டையூர் தனிலும்
நன்றுடை யானைத் தீயதி லானை
ஒன்ரும் வெள்ளே றுடையான் தன்னை
அமைத்தோள் நங்கை மட்டுவார் குழலியாம்
உமையொரு பாகம் உடையான் தன்னைச்

சென்றடை யாத திருவுடை யானை
என்றும் அடியார் ஏத்தும் பதியாய்
மன்னும் திருச்சி வளநகர் தனிலும்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் தண்டுறைச் சங்கமும்
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டியல் தேர்ந்தன செல்லும்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூடலில்
இடம்பட விரிந்தபொற் றாமரைக் கரையிலும்
கோடிமா தவத்தால் குறைவிலாச் செல்வம்
கூடியே பின்னர்க் குன்றினர் தம்மை
வீடவே எறிந்துபின் அன்புளங் கொண்டு
தேடிமால் செய்த திருவளர் கோயில்
நிலவும் இராமேச் சரமெனும் பதியிலும்
நறும்புன விழிதரு மருவிகள் பலவொடு
குறும்பலா மேவுங் குற்றா லத்திலும்
தண்டமிழ் தந்தபேர் அண்ணல் அகத்தியர்
பண்புற விளங்கும் பாப நாசத்திலும்
திருமுறை யோதிச் சிவவொலி பெருகப்
பெருநிதி அளித்தறக் கட்டளை வகுத்துநல்
லோதுவார் தம்மை நியமனம் செய்தே
ஆதரிக் கின்ற அருள்நந்தி செம்மலின்
சிறப்பார் செம்மலர் நோன்றாள்
அறப்புணை யாகும் பிறவிக் கடற்கே. (3)

கடக்குஞ் சரமா பணிசெய்யக்
கருணை புரிந்த சுசீந்திரத்தால்
தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தோயும் தூய திருமுறையை
அடுக்கும் இசைவல் லாரோத
அருமை நிதியம் தனைவைத்து
நடக்கச் செய்யும் அருள்நந்தி
நம்பான் உள்ளம் மிகநன்றே. (4)

நன்று கருது மன்ப ரிதய
கஞ்ச மருவு நந்தியே
நல்ல மறையில் வல்லர் மகிழ
நெஞ்ச முருகு புந்தியே
என்றுந் திருவை சூண்ட மதன்கண்
செஞ்சொற் றிருமு றைகளை
இன்ப இசையிற் பாட நிதியம்
தன்னை யருளும் எந்தையே
குன்ற மிமயங் கன்னி வரையில்
அன்ன முதவு மன்னையே
கொன்றை மலர்கள் துன்று சடையின்
தெய்வம் புகழு தெய்வமே
கன்றுவினைகள் தந்த பிறவி
அஞ்ச முழுகு கங்கையே
கல்வி யமுத மெங்கு முதவி
விஞ்சு நிலவு திங்களே. (5)

இங்ஙனம்

திருப்பனந்தாள் 11—9—1959

செந்தமிழ்க் கல்லூரி நிர்வாகக்குழு சார்பில்
க. சுப்பிரமணிய ஐயர்

எழுதியது:
திருமுறைச் செம்மல் வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம்.

உ
சிவ-சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் திருவங்கமாலை

1. தலையே நீவணங்காய்—
தரு மங்கள்முந் நூற்றினுக்குத்
தலையா குந்நிதி தந்த தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

2. கண்காள் காண்மின்களோ—
கன கல்வெட்டில் தேவாரத்தைக்
கண்ணால் கண்டவை யோதச்செய் தான்தனைக்
கண்காள் காண்மின்களோ.

3. செவிகாள் கேண்மின்களோ—
சிவன் தேவாரத் திருமுறையைப்
புவியோர் கேட்க நிதியளித் தான்திறம்
செவிகாள் கேண்மின்களோ.

4. மூக்கே நீமுரலாய்—
முது மாமது ரைச்சொக்கனார்
சேர்க்கைச் சந்தனம் மெய்பூசச் செய்தானை
மூக்கே நீமுரலாய்.

5. வாயே வாழ்த்துகண்டாய்—
வளர் மூன்றுபு ராணங்களில்
ஆயும்பி ரசங்கம் செய்ய அளித்தானை
வாயே வாழ்த்துகண்டாய்.

6. நெஞ்சே நீ நினையாய்—
நிதி செஞ்சடை வேதியற்குத்
துஞ்சா நெய்விளக் கேற்றிட வைத்தானை
நெஞ்சே நீநினையாய்.

7. கைகாள் கூப்பித்தொழீர்—
கதி மாமயில் ஏறுங்கந்தன்
தெய்வதப் பூங்கழல் பூசிக்கும் கையனைக்
கைகாள் கூப்பித்தொழீர்.

8. ஆக்கை யாற்பணிமின்—
அருள் நந்திஎம் செம்மல்தனைப்
பூக்கைக் கொண்டரன் போற்றும் புனிதனை
ஆக்கை யாற்பணிமின்.

9. கால்காள் வலம்வருவீர் -
கமழ் கேதார மாமலையில்
மேலே ஏறிட வேநிதி வைத்தானைக்
கால்காள் வலம்வருவீர்.

10. உற்றார் வேறுளரோ?—
உயர் தாமரை வென்றுநின்ற
நற்றாள் தந்தருள் நந்தியல் லால்நமக்
குற்றார் வேறுளரோ?

11. இறுமாந் திருப்பம் யாமே—
இளஞ் செந்தமிழ் பேணநிலப்
பெறுமா னம்லக்கம் ஒன்றரை வைத்தான்கீழ்
இறுமாந் திருப்பம் யாமே.

12. தேடிக் கண்டுகொண்டேம்--
சிவ வென்னுந்தி ருமந்திரம்
நாடித் தந்தருள் நந்தியை எம்முளே
தேடிக் கண்டுகொண்டேம்.

இங்ஙனம்
திருப்பனந்தாள் 11—9—1959
பணிவுள்ள
செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியரேம்

எழுதியது :
திருமுறைச் செம்மல் வித்துவான் திரு.தா. ம. வெள்ளைவாரணம்.

உ
சிவ.சிவ

ஸ்ரீ காசிமடத்துத் திருமரபுத் தொகை

திருக்கயிலைப் புரமென்னும் ஸ்ரீவைகுண் டத்தில்
திருச்செந்திலாண்டவனின் திருவருளால்தோன்றித்
திருத்தரும புரந்தன்னில் சிவதீக்கை பெற்றுச்
சீராரும் மாசிலா மணியார்க்கா ளாகி
அருளாரும் காசிதனில் அழகுமடம் கண்ட
ஆதிதிரு குமரகுரு பரமுனிவர்க் கடியேம்
அருட்குமர குருநினைவில் அளவில்நிதி வைத்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (1)

கந்தர்கலி வெண்பாவை முதலாக வைத்துக்
கனிதமிழிற் பிரபந்தம் பதினன்கு பாடித்
தந்தமுனி குமரகுரு பரர்க்கடிமை யுற்றுச்
சங்கரன்தாள் சேர்சொக்க நாதர்க்கு மடியேம்
அந்தண் அரு ளார் அருணு சலமுனிவர்க் கடியேம்
அன்பர் அம் பலவாண முனிவர்க்கு மடியேம்
அந்தமில்சீர் சடையப்ப முனிவர்க்கு மடியேம்
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (2)

சுமைமிகு கங்கைநதி சூழ்காசி நகரில்
தோற்றஞ்சால் கேதார கட்டமரு குற்ற
செம்மைமிகுஞ் காசிமடம் தன்னதற்கோர் கிளையாய்ச்
செழும்பனசை நகரதனில் திருமடமொன் றுக்கி
மும்மைமலம் ஒடுங்குவித்து முத்திநெறி பெற்ற
முனிதில்லை நாயகராம் அடியார்க்கு மடியேம்
அம்மைப்பே யார்நினைவில் அன்ன நிதி வைத்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (3)

பத்திமிகப் போதொடுநீர் சுமந்தேந்தி என்றும்
பரமகுரு திருச்செந்தி லாண்டவனை ஏத்தி
முத்திபெறு குமரகுரு பரரென்னும் ஏழாம்
முறைவந்த பட்டத்து முனிவர்க்கும் அடியேம்
சத்தியவள் காண நடம் புரிவானூர்ப் பெயரைத்
தாங்குசிதம் பரநாத முனிவர்க்கு மடியேம்
அத்திமக ளாம்பதியில் அரும்பதிகம் பதித்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம்.(4)

முப்பத்தெட் டாண்டளவும் காசிமடம் தன்னில்
முறையாகச் சைவத்தின் செங்கோலை ஓச்சிச்
செப்பருஞ்சீர் பனசைநகர்ச் செஞ்சடையான் பெயரால்
திகழ்வுற்ற சடையப்ப முனிவர்க்கும் அடியேம்
துப்பாருந் திருமேனிச் செந்திலன்பால் அன்பு
தோய்வுமிகும் கணபதியாம் முனிவர்க்கு மடியேம்
அப்பூதி பேர்நினைவில் நிதிகள்பல வைத்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (5)

ஊனுயி உயிராகி உயிருக்கோர் உயிராய்
உலகெங்குந் தானாகிப் புனலாகி அனலாய்
வானாகி வளியாகி நிற்கின்ற இறைவன்
வடிவாகித் திகழ்கின்ற இராமலிங்கர்க் கடியேம்
தேனாய அமுதாய திருவைந்தெழுத்தைச்
சிந்தித்துச் சிவனருள்சேர் சொக்கலிங்கர்க் [கடியேம்
ஆனாயர் பேர்நினைவில் அன்னநிதி வைத்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (6)

முகத்திலருள் ஒளிவீச முறைசெய்த சைவ
முனிவர்திரு கணபதியார் அடியார்க்கு மடியேம்
சகத்திலுயர் வயற்பனசைக் காசிமடம் தன்னில்
தகைபூசை மடம்எட்டுத் திருமகளின் கூடம்

இகத்தோடு பரசுகஞ்செய் விஸ்வேசர் கோவில்
இனையபல திருப்பணிசெய் இராமலிங்கர்க் கடியேம்
அகத்தியர்தே வாரநிதி வாரமொடு வைத்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (7)

கரியமால் காணாத கழலடியைக் கண்ட
கண்பொன்னம் பலமுனிவர் அடியார்க்கு மடியேம்
அரிதாம்தோர் ஐந்தோட்டி விச்வேசர் விழாவை
அணிசெய்த நற்சோம சுந்தரர்க்கு மடியேம்
உரியபதி னேழாகும் பட்டமதில் வந்த
உயர்முனியாம் சொக்கலிங்கர் அடியார்க்கு மடியேம்
அரியநா யகிபுர்த்தில் நூல்நிலையம் வைத்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (8)

மெய்யடிமை செய்ததிரு அடியார்க்கு மேலாம்
மெய்ஞ்ஞானச் செந்தமிழை விளக்கிவிரி வாக்கிப்
பொய்யடிமை யில்லாத புலவரென மேவிப்
புகழ்பதினெட் டானதிருப் பட்டமதில் வந்து
செய்யசிவ சைவத்தின் செங்கோலை ஓச்சித்
திகழ்ந்தமுனி சொக்கலிங்கர் அடியார்க்கு மடியேம்
ஐயாயி ரந்தில்லை ஆயிரக்காற் களித்த
அருட்பனசை அருள்நந்தி அம்மானுக் காளேம். (9)

சிவனுய்ந்த இயற்றமிழ்க்கோர் ஆயிரமாம் பரிசும்
சித்தாந்தப் பரிசோடு திருமுறையின் பரிசும்
உவகையிசைத் தமிழ்ப்பரிசும் அகப்பொருளின் பரிசும்
உயர்யாப்புப் பரிசுமென ஈரேழ்மேல் வைத்துப்
புவனியிடைப் புலவர்புகழ் பொலிவெய்தி வாழ்ந்த
புண்ணியராம் சாமிநாத சுவாமிகளுக் கடியேம்
அவனியிடைப் பரிசுவகை ஐயேழ்மேல் வைத்த
அருட்பனசைஅருள்நந்திஅம்மானுக்காளேம். (10)

மன்னியசீர் மறைவளர வான்சைவம் வளர
மாதேவன் திருமுறைகள் சித்தாந்தம் வளரத்
தென்னுட்டும் எந்நாட்டும் செய்தருமம் வளரச்
சிவசிவநல் ஒளிவளரச் செந்தமிழும் வளர
நன்னிதியம் பலவமைத்து நாடோறும் வளர்க்கும்
நற்சிந்தை அருணந்தி நளினமல ரடிக்கண்
அன்புமலி ஆசிரியர் அடிமைகேட் டுவப்பார்
அருணந்தி அம்மானுக் கன்பரா வாரே. (11)

திருப்பனந்தாள்
11-9-1959

இங்ஙனம்
பணிவுள்ள
செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியரேம்

எழுதியது:
திருமுறைச் செம்மல் வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம்.

உ
சிவமயம்

அன்பு மலர்

102402

மணங்கமழும் நறுங்கொன்றை மதியமொடு சூடியவன்
மகனின் பாதம்
குணங்கொண்டு போற்றியநல் குமரகுரு பரமுனிவர்
மரபில் வந்து
கணங்கொண்ட புகழ்மிக்க காசிமடம் வாழ்விக்கும்
கருணை மூர்த்தி!
வணங்கினம்நும் பாதமலர் வளர்நிதிகள் கல்விக்கு
வழங்கல் கண்டே. (1)

செல்வமெனும் கல்விதனை ஒழுக்கத்தைச் சிறுவர்களும்
தெளிந்து கற்க
எல்லையிலா அறநிதிகள் இயற்றியநும் பெருமைதனை
இயம்பற் பாற்றோ?
சொல்லவொணா உவகைமிகச் சிறப்பாரும் தவவடிவச்
சிவமார் யோகி!
பல்காலும் பாதமலர் பணிந்தேத்திப் பரவினம்எம்
பரமன் என்றே! (2)

சிற்றுயிர்க்கோர் உற்றதுணை சிறப்பான கல்விஎனும்
செம்மை நோக்கிக்
கற்றுமிகப் புலவரெனக் களிப்பதற்குக் கல்லூரி
கண்ட எந்தாய்!
பற்றின்றித் துறவறமாம் பரமஞா னங்கொண்ட
பரம யோகி!
உற்றுமது திருவடியை உவகையுடன் தொழுதனம்நும்
உயர்வு கண்டே. (3)

O-,11MAT,A
N59

செம்மைமிகு பனசையிலும் திருலோக்கி தனிலுமுயர்
தொடக்கப் பள்ளி
மம்மரறுக் குங்கல்வி மாட்சியுடன் கற்பதற்கு
வைத்த செம்மால்!
மும்மையால் உலகாண்ட மூர்த்திஎன விளங்குகின்ற
முதல்வ மூர்த்தி!
எம்முடைய சிரந்தாழ்த்தி இறைஞ்சினம்நும் திருவடியின்
ஏற்றம் கண்டே. (4)

சென்னெல்வளர் ஆடுதுறை வைகுண்டம் என்கின்ற
திருவாழ் ஊரில்
அன்புருவாம் குமரகுரு அடிகளவர் திருப்பெயரை
அமைத்து நன்கு
மன்னியநல் உயர்நிலையாம் பள்ளிகளை உண்டாக்கி
மகிமை மிக்க
நன்னிதியம் வழங்குமருள் நந்தியவர் பாதமலர்
நாடி வாழ்வாம். (5)

பல்கலையும் பரப்புகின்ற பல்கலையாம் கழகங்கள்
பாங்காய் ஓங்கும்
சொல்லரிய சென்னையினில் திருவாங்கூர் நகரதனில்
காசி தன்னில்
கல்கத்தா முதலாகப் பலநகரில் சித்தாந்தம்
பரப்பு தற்கே
எல்லையிலா நிதிவழங்கும் ஏந்தலவர் திருப்பாதம்
இறைஞ்சி வாழ்வாம். (6)

கற்றவர்கள் போற்றுகின்ற கரையில்லாத் திருமுறையைக்
கல்லில் வெட்டிச்
செற்றவர்கள் புரமெரித்த சிவன்கோவில் பலதம்மில்
சிறக்க வைத்தும்
மற்றந்தத் திருமுறையே முதலாகப் பலநூலும்
பதிப்புச் செய்தும்
உற்றதிருத் தொண்டாற்றும் உத்தமநும் திருவடியை
உற்று வாழ்வாம். (7)

கூடல்தனில் சிதம்பரத்தில் குமரக்கோட் டந்தன்னில்
குறைவொன் றில்லா
மாடமலி பிறபதியில் பரஞ்சோதி விளையாடல்
மதியோர் போற்றும்
ஈடரிய திருத்தொண்டர் புராணமே கந்தனவன்
புராணம் மூன்றும்
நாட றியச் சொற்பெருக்க நாடியவன் திருவடியை
நாடி வாழ்வாம். (8)

ஞாலத்தார் தொழுதேத்தும் தன்மையதாய் எஞ்ஞான்றும்
நல்லோர் போற்றக்
காலத்தாற் காணவொணுப் பான்மையதாய்க்கவிஞர்களும்
கவிகள் பாடச்
சாலத்தாம் செய்தருமம் தரணிதனில் எம்போல்வார்
சாற்றும் பாற்றே?
சீலத்தான் மிக்கோங்கும் திருவடியை வணங்கிநலம்
சிறக்க வாழ்வாம். (9)

மண்ணெல்லாம் புகழ்பரவத் தலமெல்லாம் கொடைபரவ
மாட்சி கொண்டு
பண்ணெல்லாம் திசைபரவப் பதிகமெலாம் வாய்பரவப்
பாரில் எங்கும்
கண்ணென்னக் கலைவளரக் கல்வியொடு நிதிவளரக்
கருணை வைத்த
வண்மைமிகு செம்மலெனும் அருள்நந்தி பாதமலர்
வணங்கி வாழ்வாம். (10)

இங்ஙனம்

திருப்பனந்தாள்
11—9—1959

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்

உ

சிவ சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் போற்றித் திருவகவல்

சீர்பெறு காவிரி ஏர்பெறு கங்கைக்
கரையமர் காசியும் கவின்பெறு பனசையும்
'திருநாக ராக அரசுவீற் றிருக்கும்'
அருள் நந்தி முனிவநின் அடியிணை போற்றி!
'ஆன்றவிந் தடங்கிய சான்றோய்' போற்றி!
இமையமால் வரையின் சிமையப் பிடர்த்தலை
திருக்கே தாரத் திருத்தலம் சென்றுசென்
'றெந்தை பெம்மான் எனநின் றிறைஞ்சும்'
சிந்தனைக் கரிய சிவமே போற்றி!
குமர குருபரர் திருநாட் குலவிய
சிவன்தமர் அந்தணர் செந்நெறி யாளர்
தவமுனி வரர்பலர் தனிவிருந் துண்ண
ஈரேழ் இரட்டிய தலங்களுள் நிதிபல
காரென அமைத்த தாரோய் போற்றி!
திருவா சகந்திருத் தொண்டர் புராணம்
கருவே றறுக்குங் கந்த புராணம்
ஆலவாய் தில்லை அழகமர் காஞ்சியுள்
ஏலவே விரிவுரை இயற்றநன் னிதிகள்
தமிழ்ப்புல வோர்க்கெனச் சமைத்தனை போற்றி!
சிவசிவ ஒளிவளர் விளக்குகள் சிவத்தலம்
தவப்பல அமைத்த சைவா போற்றி!
தோடு கூற்றுப் பித்தா என்னும்
பீடுடைப் பதிகம் பெற்றவத் தலத்தும்,
திருக்கழுக் குன்றில் திருவா சகமும்,

திருப்புன் கூரில் சுந்தரர் செய்யுளும்,
திருமறைக் காட்டில் திறக்கஅழ டியவும்,
திருவிடைக் கழியில் சேந்தனர் இசையும்,
திருமரு கலில்விடம் தீர்த்தநற் பதிகமும்,
திருக்குற் றாலத்துத் திருந்த மதிசூடி
திருவங்க மாலை வம்பார் குன்றமும்,
கண்பெறு பதிகம் காஞ்சியம் பதியிலும்,
கண்பொலி நெற்றி திருப்பனந் தாளிலும்,
மந்திரம் திருக்குறள் மதுரையம் பதியிலும்,
கந்தரனு பூதி ஏரகப் பதியிலும்,
வீடதிரு முல்லை வாயிலில் திருவும்,
மடையில் வாளை கோலக் காவிலும்,
தில்லையில் திருப்பல் லாண்டுசிவ புராணமும்,
நெல்லையில் மருந்தவை மந்திரப் பதிகமும்,
மட்டிட்ட புன்னை மயிலையம் பதியிலும்,
எற்றான் மறக்கேன் அவிநா சியிலும்
பூத்தேர்ந் தாயன ஓத்தூர் தனிலும்,
பூவிலர்ந் தனதிருத் தெளிச்சே ரியிலும்,
மாதர்ப் பிறைக்கண்ணி திருவை யாற்றிலும்,
மாமலைத் திருச்சியில் மட்டுவார் குழலொடு
நன்றுடை யானை எனுநற் பதிகமும்,
இன்னபிற பதிகளில் இனையன பிறவும்
வெண்கற் சாசனம் வெட்டுவித் தமைத்துத்
தண்டமிழ் சாற்றும் கொண்டலே **போற்றி !**
திருமுறை திருக்குறள் பதிக்கப் பெருநிதி
அருளிய அருணந்தி அருங்கழல் **போற்றி !**
ஆதி குமர குருபரர் அருளிய
நீதிநெறி விளக்கம் ஓதியே நெறிப்பட
மாடமலி செந்தில் ஸ்ரீவை திருச்சி
கூடலில் பரிசுகள் குறித்தனை **போற்றி!**
சென்னையில் சிவபோக சாரமாம் நூலும்,
சென்னையம் பதியில் திருவிதாங் கூரில்

நன்னர் நீதி நவில்குறள் நூலும்,
திருநெல் வேலியில் திருக்குடந் தையினில்
திருஅருள் அபிராபி அந்தாதி நூலும்,
மதுரை ஆரூர் காஞ்சி திருவாங்கூர்ப்
பதிகளில் முதுமொழி மேல்வைப்பு நூலும்,
கற்கப் பரிசுகள் கண்ணினை போற்றி!
சொற்பதம் கடந்த தூயோய் போற்றி!
திருவளர் திருச்சிற் றம்பலத் தில்லையில்
அருணையில் தஞ்சையில் ஆலவாய்க் கூடலில்
நரிபரி கண்டோன் நற்றிரு வாசகப்
பரிசுகள் அருள்செய்யும் பண்பினை போற்றி!
பசுக்களை வளர்க்கப் பசுப்பரி சமைத்தும்,
பசுப்பயன் வளர்க்கப் பழம்பாப நாசம்
செந்தில் அருணை சுவாமி மலையினில்
சமவர்த் தனநிதி தந்தனை போற்றி!
செந்தில் முதலாச் சிதம்பரம் ஈறு
ஒன்பது பதிகளில் நன்னீர்ப் பந்தர்
நிறுவ நிதிதரு நிருமல போற்றி!
சித்திரைச் சதயம் பரணிதிரு நாட்களில்
அத்தர்பூந் துருத்திசெங் காட்டங் குடியிலும்,
வைகாசிப் பூசம் சேக்கிழார் குன்றிலும்,
ஆனிமா மகத்தில் கழுக்குன் றத் றத்தொடு
தேனிகர் வாசகர் வாதவூர் தனிலும்,
ஆடிஅமா வாசையில் பூம்புகார் நகரிலும்,
ஆடிச் சுவாதியில் அஞ்சைக் களத்திலும்,
ஆவணி மூல நன்னா ளதனில்
ஆலவாய் தில்லை காஞ்சியொடு பிறவுளும்,
தைப்பூ சத்தில் திருவிடை மருதினும்,
மாசிசிவ னிராவில் காளத்தி தனிலும்,
மாசி வுத்திரத்தில் மைலாப் பூரிலும்,
மிருகசீ ரிடத்தில் காஞ்சிமா நகரிலும்,
பங்குனிச் சுவாதியில் வடவாலங் காட்டிலும்,

அப்பர்சிறுத் தொண்டர் அருண்மொழி சேக்கிழார்
வாதவூ ரன்பர் சேரமான் பெருமாள்
கண்ணப்பர் வள்ளுவர் கச்சியப்ப அந்தணர்
காரைக்கா லம்மையார் போன்ருேர் பெயரினில்
அன்னம் பாலிக்க அருநிதி வைத்த
அன்னேயே அன்பின் அரசே போற்றி !
தில்லேக் கூத்தனை தினம்பூ சிக்கும்
தில்லேவாழ் அந்தணர் பதினறு பேர்க்கு
நாடொறும் அன்னம் நல்கிடு நிதியம்
பீடுற வைத்த பெம்மான் போற்றி !
ஆரூர் தில்லே மதுரை முதலாப்
பேரூர் பலவுளும் பெருநிதி வைத்துத்
திருமுறை விழாச்செய் செம்மால் போற்றி !
திருக்குற்ருலம் சுசீந்திரம் முதற்பல
திருக்கோ வில்களில் திருமுறை முழங்க
ஓதுவார் அமைத்த உத்தம போற்றி !
திருப்பனந் தாளில் கொட்டையூர் தன்னில்
திருலோக் கிதனில் தொடக்கப் பள்ளியும்
திருவை குண்டம் ஆடுதுறை முதலாப்
பற்பல ஊர்களில் உயர்நிலேப் பள்ளியும்
பனசைமா நகரில் தமிழ்க்கல் லூரியும்
பாங்குற நடத்தும் பரமா போற்றி !
அண்ணு மலேநகர் ஆக்ரா காசி,
திருவுடைப் பற்பல பல்கலேக் கழகத்து
அருமைச் சைவ சித்தாந் தத்தைப்
பெருமையாய் வளர்க்கும் பெரியோய் போற்றி !
குடந்தை மதுரை லால்குடி காசி
நெல்லே செந்தில் முதலிய நகர்களில்
கல்வி பயின்றிடு கன்னியர் தமக்கென
உணவுத வித்தொகை உதவுவை போற்றி !
குண நிதி யாகக் குலவுவை போற்றி !
அன்னதா னம்முதல் அறம்பல செய்யும்

நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
யானறி அளவையின் ஏத்தினன் அவ்வறம்;
பெரியோர் அறிந்துதாம் பேசின் அல்லது
விரிப்பின் பெருகும் தொகுப்பின் எஞ்சும்;
நின்னடி உள்ளினன் நிதிபதி போற்றி!
பொன்னடி தொழுதனன் புங்கவ போற்றி!
போற்றி! அருள்நந்தி போற்றி!
போற்றி! போற்றி! சிவ சிவ போற்றி!

இங்ஙனம்
மீளா அடிமை
கே. எம். வேங்கடராமையா.

திருப்பனந்தாள்
11—[illegible]—1959

சிவ சிவ

ஸ்ரீ அருள்நந்தி சுவாமிகள் திருமும்மணிக் கோவை

(காப்பு)

மன்னிய தவத்தோர்க்கும் நானிலத்தில் மற்றோர்க்கும்
அன்னம் அளிக்கும் அருள் நந்தி—தன்பேரில்
சீர்மும் மணிக்கோவை செப்புதற்குக் காப்பாகும்
கார்மா முகத்தோன் கழல்.

(நூல்)

1. மலர்மலி குரவமும் மரவமும் கோங்கமும்
பொலமலர் ஞாழலும் புன்னையும் பிண்டியும்
வேங்கையும் பலாவும் விரிந்தமா மரமும்
ஓங்குபு வளமிகும் உச்சியின் மீது
வண்டுபண் பாட மயில்நட மாடக்
கெண்டைகள் பாயக் கிளர்மறி துள்ள
நீர்திகழ் சுனையின் நீலமொட் டலர
ஏர்மிகு கின்ற கேதார நாதன்
சீர்மிகு திருவடி சிந்தையிற் கொண்டும்
புக்கவண் நீரில் புரோதாய மூழ்கியும்
தக்கநல் லிண்டைகள் தகையுறச் சாத்தியும்
'எந்தை பெம்மான் என நின் றிறைஞ்சியும்'
முந்தை அந்தணர் முறைவழி வரூஉம்
கேதார நாதப் பாண்டாக்க ளுக்கு
வைகாசி மாத அமரபக் கத்துத்
திருதியை நாளில் சிவனடி அடைந்த
ஆதி குமர குருபர சுவாமிகள்
நினைவின் பொருட்டு மேற்படி நாளில்
ஆண்டாண்டு தோறும் அன்னம் அளிக்க
வெண்பொன் ஏழாயிரம் விரும்பிநிதி வைத்த
அண்ணல் அருள் நந்தி அடிமலர் இணைதமை

எண்முறை மேலும் கேதார யாத்திரை
பண்ணிவந் தனவெனப் பார்போற் றும்மே.

2. மேதக்க நற்றவத்தான் மேவும் ரிஷிகேசச்
சாதுக்கட் கெல்லாம் தகையாக—ஆதரத்தால்
அன்னம் அளிக்க அருள்நந்தி அண்ணலார்
பொன்னிதியம் வைத்தார் புரிந்து.

3. துங்க மதியணி தூயோன் சடைமிசைத்
தோன்றிவரும்
கங்கை நதிமலை விட்டுத் தரைசேர்
ஹரித்துவாரில்
தங்கித் தவம்புரி சாதுக் களுக்கன்னம்
தாமளிக்க
அவசையால் எண்ணு யிரநிதி வைத்தார்
அருள்நந்தியே.

4. அருள்நந்தி அண்ணல் அடிமலர் தொழுமின்
பொருள்தரு கின்ற புண்ணியம் நினைமின்
கங்கையும் வாணியும் காளிந்தி நதியும்
பொங்கியே ஒன்ருய்ப் பொலிதிரி வேணியைத்
தான்செய் கவியுள் தகைபெற நோக்கி
நான்முறை உவமையா நன்கெடுத் தியம்பிய
ஆதி குமர குருபரர் நினைவில்
சாதுக் கலுக்கும் ஏழைக ளுக்கும்
சீர்பிர யாகையில் அன்னம்பா லிக்க
ஐயா யிரத்தோ டாறுநூ றளித்துப்
பெருநிதி வைத்த அருமையை மொழிமின்
மெய்யும் மனமும் மேம்படு மொழியும்
செய்யநன் னெறியிற் சீருடன் செலற்கே.

5. கேழ்கெழுமு காவலரும் கேடில்லாப் பாவலரும்
காழ்கொள்ளா தேடவிழ்க்கும் காசிதனில்
—வாழ்கின்ற
அந்தணர்க்கும் சைவர்க்கும் அன்னநிதி
அந்தண் அருள்நந்தி யார். [வைத்தனரால்

6. யாரே இவரைப்போ லன்புசெய் கிற்பவர்
என்றுரைக்கக்
காரேயெனப்பொலிகண்ணப்பர்கண்ணப்புங்
காளத்தியில்
யாரே இவரைப்போ லன்னம்பா லிப்பவர்
என்றுரைக்கச்
சீரே மிகுநிதி வைத்தார் அருள்நந்திச்
செம்மலரே.

7. செம்மற் றூவியும் செந்தேன் சிந்தியும்
மும்மல மோட்ட முயலுநர் போல
ஒற்றைத் தாளில் ஓங்கியே நின்றும்
சுற்றுஞ் சோலைகள் வழிபடு கின்ற
திருத்தணி என்னும் சீர்பதி தன்னில்
அருந்தவர் ஏழைகள் அந்தணர் தமக்கெலாம்
அன்னம்பா லிக்க அருள்நந்தி வள்ளல்
நன்னர் நிதியம் நல்கினர் நெஞ்சே!
அன்னவர் ஆற்றிய அறன்வழி சென்மே.

8. சென்னை நகரில்ஸ்ரீ ஆதி குருபரர்நாள்
அன்னம் அளிக்கநிதி ஆக்கினர்—நன்மைமிகு
ஆசி அளிக்கும் அருள்நந்தி வள்ளலெனும்
காசி மடத்ததிபர் காண்.

9. காணும் அடிமுடி என்றே கனலுரு
காட்டிநிற்க
மாணும் அயனெடு மாலுங்கா ணுதஅண்
ணுமலையில்
பேணும் தவத்தவர் அந்தணர் ஏழைகட்
கோர்நிதியம்
பூணும் புகழ்அருள் நந்திதந் தார்அன்னம்
பாலிக்கவே.

10. பாலிமா நதியின் பாங்கர்வெண் மணலைக்
கோலிக் குவித்துக் கொண்டார்ச் சனைபுரி
காமக் கண்ணியின் காஞ்சீ புரத்தில்
சிவார்ச்சனை செய்யும் சிவவே தியர்க்கும்

ஏழைகள் தமக்கும் இன்னுண வளிக்க
அருநிதி அளித்த அருள்நந்தி நிதிகளை
ஒருமையின் எண்ணி ஓதுமின் நீரே.

11. 'நீரிற் குமிழி இளமை' எனநீதி
பாரிற்குரைத்தொருநூல் பாடினவர் பேரினிலே
தில்லைதனில் அன்னம்பா லிக்க நிதிதந்தார்
நல்லருள் நந்தி நயந்து.

12. துய்யவெண்ணீற்றுமை ஆச்சாள்புரமெனும்
தொன்னகரில்
செய்ய குமர குருபரர் நாளில்
சிவனடியார்
நெய்யநல் லன்னம் புசிக்க நிதியம்ஐ
யாயிரத்தை
வையத்தார் வாழ்த்திட வைத்த அருள்நந்தி
வாழியவே.

13. வாழியர் நன்றே வாழியர் நன்றே
ஊழியும் அழியாக் காழிமா நகரில்
குமரகுரு பரரின் திருதியை நாளில்
அமரர்க் கிணையாம் அந்தணர் அருந்த
அன்னம்பா லிப்பு நிதியத் திற்குவெண்
பொன்ஐ யாயிரம் போற்றித் தந்த
புண்ணியர் அருள்நந்தி பூங்கழல்
எண்ணிய வேண்டி இதயம்வைத் தோரே.

14. வைத்தா ரொருநிதியம் வாலன்னம் பாலிக்க
வைத்தீஸ் வரன்கோயில் வாழ்வார்க்கு—
மெய்த்தானம்
பொருள்ஞானம் மேவிப் பொலிவுற்று நின்ற
அருள்நந்தி என்னுமதி பார்.

15. அதிபதி காசி மடத்தின் நிதிபதி
அன்புவெள்ளம்
பொதிதரும் ஆதி நிதியருள் செய்தனர்
ஓரிலக்கம்

நதிமதி செஞ்சடை வானவன் மேவிய
நற்பனசைப்
பதிதனில் சைவ மகேஸ்வர பூசையைப்
பண்ணுதற்கே.

16. கேழற் கொம்பும் கிளர்வெள் ளெலும்பும்
வேழத் துரியும் விரும்பும் சிவனை
வேட்கும் அடியமை அடியா ராக்கி
ஆட்கொண் டருள்செய் அருள்நந்தி அண்
வருடந் தோறும் வைகாசித் திருதியை [ணல்
வருதிரு நாளில் அடியார் அருந்த
ஆற்றவே அனநிதி ஐயா யிரத்தைப்
போற்றியே வைத்தனர் புகலூர் தனிலே.

17. தனியன்னம் காணுத் தயவாளர் ஆரூர்
தனிலன்னம் பாலிக்கத் தந்தார்—பனியன்ன
வெண்ணீறு பூசும் விகிர்தர் அருள்நந்தி
ஒண்பொருள்சேர் மூலதனம் ஒன்று.

18. ஒன்றே நினைப்பிரண் டாகும் பிறப்புமுந்
நூலணிந்தே
நன்றே நவில்நான் மறையோதி ஐம்புல
மாங்களிற்றை
வென்றுறெழுத்தெண்ணும்வேதியர்வாழ்கின்ற
ஏரகத்தில்
நன்றும் நிதிவைத்தார் அண்ணல் அருள்நந்தி
அன்னத்திற்கே.

19. அன்னம் காணு முடியோ னுகியும்
அன்பர் காணும் அடியோ னுகியும்
'ஓசை ஒலியெலாம் ஆனு' னுகியும்
'பேசப் பெரிதும் இனியா' னுகியும்
சைவன் எம்மான் தானெழுந் தருளும்
ஐயா றதனில் அந்தணர் தமக்கென
ஆரு யிரநிதி அருள்நந்தி வைத்தனர்
பேறும் அன்னம் பாலித் தற்கே.

4A
2-43

20. தற்கோர் பிரானின்றித் தண்ணீர்த் திரள்நாதர்
எற்கோர் பிராஞய் எழுந்தருளும்—முற்கோல
ஆனைக்கா தன்னில் அருள்நந்தி தந்தநிதி
ஆனைய் அனமளிக்க ஆம்.

21. ஆமா றறிந்தா றெழுத்தான் அடியை
அகத்தடக்கிப்
பாமாரி பெய்கின்ற பாவலர் மேவும்
பழநிதனில்
காமாரி சேயைக் கருதும் அடியவர்க்
கன்னமிட
மாமாரி அன்ன அருள்நந்தி வைத்தனர்
மாநிதியே.

22. ஏழிசைச் 'சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டும்
கடவுள்செங் கைக்குப் படிஎடுப் பேய்க்கும்
தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூடலில்
அந்தணர் அருந்தவர் ஏழைகட் கெல்லாம்
அன்னம்பா லிக்கவோர் அறக்கட் டளையைக்
கன்னியா குமரி வகையரு நிதியில்
அருள்நந்தி ஏந்தல் அருளினர் நன்றே.

23. நன்றும் தமிழ்வளரக் கல்லூரி நாட்டியதை
அன்பாகக்காக்கும் அருள்நந்தி பொன்னிதியம்
ஈந்தனரே கோடி இராமேச் சரந்தன்னில்
தேர்ந்தவனம் பாலிக்கத் தேர்ந்து.

24. தேர்ந்த தமிழினிற் கந்தர் கலிவெண்பா
செப்பிஅருள்
கூர்ந்த குமர குருபர மாமுனி
நாளதனில்
ஊர்ந்த அலைவாய் எனும்செந்தி லில்அன்னம்
பாலித்தற்கே
நேர்ந்தனர் ஐயா யிரத்தை அருள்நந்தி
நின்மலரே.

மலர்மணம் கமழும் மாண்பார் சோலை
நிலவிய காசியில் திருமடம் கண்ட
குமர குருபர சுவாமிகள் தோன்றிய
வைகுண்டம் என்னும் கயிலாய புரத்தில்
வைகாசித் திருதியை நாளில் அனமிட
ஒன்பதி னுயிரம் உதவினர்
தன்னல மில்லாத் தயவருள் நந்தியே.

26. நந்துஞ் சபையைந்துள் நற்சித் திரசபையும்
அந்தமிலா நீர்வீழ் அருவிகளும்—முந்தியகுற்
றாலத்தில் அன்னம் அருந்தநிதி நந்திபிரான்
சீலத்தில் வைத்ததனைச் செப்பு.

27. புண்ணிய ராய அகத்தியர் கோவில்
பொலிவுகண்டே
பண்ணவர் போற்றும் பழைய திருப்பாப
நாசபதி
நண்ணிய அந்தணர் சாதுக்கள் ஏழைகள்
நல்லவன்னம்
உண்ணிய தந்தார் நிதியம் அருள்நந்தி
உத்தமரே.

28. உத்தம தீர்த்தத் தொருதுறை யாகியும்
முத்தமிழ் நாட்டின் தென்னெல்லை யாகியும்
'மடலவிழ் மாலைச் செங்கை மாதவ
கன்னியா' பகவதி வதிதல மாகியும்
மன்னிய கன்னியா குமரியந் துறையில்
அருந்தவர் முதலியோர் அன்னம் அருந்தப்
பெருநிதி வைத்த பெரியோர்
அருள்நந்தி என்னும் அருந்தவத் தோரே.

29. அருந்தவத்தோர் வாழி! அருள்நந்தி வாழி!
குருபரரின் சீர்மரபர் வாழி! — திருவோங்குங்
காசி மடம்வாழி! கந்தன் திருவடியை
நேசிப்பார் வாழி நெடிது.

30. நெடிதெமை வாழ்விக்கும்; நின்மலற் பூசிக்கும
நேயமொடே
படியினில் கேதார மேமுதற் கன்னி
முனைவரையில்
அடிசில் அளிக்கும்; அறம்பல செய்யும்;
அனை நிகர்க்கும்;
கடிமலர் ஒக்கும் கருணை அருள் நந்தி
கைம்மலரே.

இங்ஙனம்
சு. பொன்னுசாமி முதலியார்
கரெஸ்பாண்டென்ட்

செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
11—9—1959

எழுதியது :
திருமுறைச் செம்மல் வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம்.

MADRAS-600
0-11MA
N59

ஸ்ரீ முருகன் அச்சகம், கும்பகோணம்.

4A
2.43

உ
திருச்சிற்றம்பலம்

நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே.

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரு ருநீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையா யென்நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

— அப்பர்

திருச்சிற்றம்பலம்